بِسْمِ اللَّهِ الرَّحْمَٰنِ الرَّحِيمِ

*In the Name of Allah, The most Gracious, the most merciful*

# KHALIFATHULLAH HAZRAT MUNIR AHMAD AZIM (A)

## Speech 2008

## ஹஸ்ரத் கலீ∴பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)

## பேருரை 2008

**2008 மேய்மாதம் 16 –ஆம் தேதி வெள்ளிக்கிழமை அன்று இஷா தொழுகையை தொடர்ந்து ஹஸ்ரத் கலீ∴பத்துல்லாஹ் ஆற்றிய பேருரை.**

## THE DIVINE DECREE

## இறைக் கட்டளை/ஆணை




ஸலாத்திற்கு பிறகு ஹஸ்ரத் கலீ∴பத்துல்லாஹ் முனீர் அஹமது அஸீம் (அலை) அவர்கள் சூரா அல் பாத்திஹா ஓதியதை தொடர்ந்து தனது பேருரையை நிகழ்த்தினார்கள்.

மொரீஷியஸ் மற்றும் பர்ம்மா, சீனா, இந்தியா, பங்களாதேஷ் போன்ற பிற நாடுகளில் என்ன நடக்கிறது என்பது பற்றி ஹுஸுர் (அலை) அவர்கள் பேசினார்கள்.

**“அல்லாஹ் மக்களுக்காக ஏதேனும் கருணையைத் திறந்து விட்டால், அதைத் தடுப்பவன் எவனுமில்லை. அவர் ஒன்றை நிறுத்திவிட்டால் அதன் பின்னர் அதனை விடுவிப்பவனும் எவனும் இல்லை. அவன் வல்லோனும் ஞானமிக்கவனுமாவான்” (35 : 3)**

**“பூமியிலோ உங்களுக்கோ எந்த ஒரு துன்பம் ஏற்பட்டாலும் அதனை நாம் வெளிப்படுத்துவதற்கு முன்னதாகவே இது ஒரு நூலில் பதிவாகி உள்ளது. நிச்சமாக இது அல்லாஹ்வுக்கு மிக எளிதே!” (57 : 23)**

இஸ்லாத்தின் மீதான நம்பிக்கையின் இறுதி நிபந்தனை என்பது “இறை நியதி” மீதான நம்பிக்கையாகும். இது அரபியில் **“கழா வ கத்ர்”** என்று அழைக்கப்படுகிறது. அதாவது அதன் அர்த்தமானது, இறைவனால் நிர்ணயிக்கப்பட்வற்றின் அளவீட்டு மற்றும் அவனது திட்டத்தின்படியான நடவடிக்கை எனலாம்.

படைப்பின் முழு திட்டமும் சர்வவல்லமையுள்ள படைப்பாளனின் மற்றும் பராமரிப்பாளனின் கட்டுபாட்டிலும் வழிகாட்டுதலிலும் இருப்பதால், பிரபஞ்சத்தில் மிகச் சிறியது முதல் மிகப்பெரியதுவரையுள்ள அனைத்து நிகழ்வுகளும் இறை விருப்பத்தால் மட்டுமே நிர்வகிக்கப்படுகின்றன. இது அவனது நித்திய திட்டத்தின் ஒரு ஒருங்கிணைந்த பகுதியாகிறது. அவனது ஆணை பிறக்காமல் எதுவும் நிகழமுடியாது அல்லது சீரற்ற தோராயமான எதுவும் நடக்க இயலாது.

ஒருவேளை அதன் அர்த்தத்தை ஒரு எடுத்துக்காட்டு மூலம் சிறப்பாக விளக்கலாம். திருக்குர்-ஆன் அல்லது பைபிளில் கூறப்படும் அதிசய நிகழ்வுகளும், இறைவனிடமிருந்து மனிதகுலத்திற்கு வெளிப்பாடுகள் கிடைப்பதற்கான சாத்தியக் கூறுகள் போன்றவை பல மக்களுக்கும் கற்பனை செய்ய முடியாத வெறும் மூடநம்பிக்கையாகவும் கட்டுக்கதைகளாகவும் தோன்றலாம். ஏனெனில் உண்மையைப் பற்றிய அவர்களின் புரிதலின்படி அவர்கள் விஷயங்களை தீர்மானிக்கின்றனர். மனித விவகாரங்களில் இறைவன் தலையிட மாட்டான், அதே

வகையான வாதம் பெரும்பாலான மக்களும் ஏற்றுக்கொள்கின்றனர். காலத்தின் தொடக்கத்திலிருந்தே நபிமார்களால் கொண்டுவரப்பட்ட மரணத்திற்குப் பிந்தைய வாழ்க்கை மற்றும் பல வழிகாட்டுதல்களில் மனிதனின் நம்பிக்கையின்மையை நியாயப்படுத்தக் கண்டுகொண்ட வழி இதுவே ஆகும்.

ஆனால் மறுபுறம் முஸ்லீம்களைப் பொறுத்த வரை இறைவன் இருக்கின்றான் என்றும் மனிதர்கிளன் உலகம் உட்பட அவனது படைப்பு அனைத்திலும் அவன் தொடர்ந்து செயல்பட்டு வருகிறான் என்றும் தெளிவாகவும் உறுதியாகவும் நம்பிக்கை கொள்கின்றனர். ஆகவே, இருப்பதும் நடப்பதும் அனைத்தும் அதாவது ஒவ்வொரு அணுவின் நடத்தை முதல் மனித வரலாற்றின் பெரிய அளவிலான நிகழ்வு வரை அவனது விருப்பத்தின் விளைவுகளாகும். இவை அனைத்தும் அவனுடையது என்பதால் அவனுடைய அனுமதி மற்றும் ஆணையால் மட்டுமே யாவும் தீர்மானிக்கப்படுகிறது. ஆகவே, இயற்கை அல்லது மனிதர்களின் உலகில் நடக்கும் எதையும் பிற தலையீடு என்றோ, இயற்கைக்கு அப்பாற்பட்டது என்றோ அல்லது அர்த்தம் மற்றும் நோக்கங்களின்றியும் நடந்தேறும் ஒரு சீரற்ற தோராயமான ஒரு நிகழ்வு என்றோ புரிந்துக்கொள்ள எந்த ஒரு அடிப்படையுமில்லை.

மனித வாழ்க்கையில் சுகமும் துக்கமும் உள்ளன. அவர்களுக்கிடையே உருவாகும் ஒவ்வொரு நிகழ்வுகளுக்கும் சமமாக ஒரு நோக்கமும் அர்த்தமும் உள்ளன. மேலும் இது, இறைவனின் படைப்பின் எல்லையற்ற ஞானமான திட்டத்தின் ஒரு பகுதியாகும்.

இத்தகைய நம்பிக்கை முஸ்லீம்களுக்கு குறிப்பாக துன்பங்களை எதிர்கொள்ளும் போது, மிக பெரிய அளவிலான உள்ளார்ந்த நம்பிக்கை மற்றும் இதய அமைதியினை வழங்குகிறது. ஏனென்றால், அனைத்தும் ஞானமிக்கவனும் இரக்கமுள்ளவனுமாகிய இறைவனின் கட்டுபாட்டில் உள்ளன என்றும் தனது வாழ்க்கை மற்றும் சூழ்நிலைகள் அவனது கட்டுப்பாட்டில் இருக்கின்றன என்றும் இதற்கு ஒரு காரணமும் நோக்கமும் இல்லாமல் இல்லை என்றும் அவர்கள் உறுதியாக நம்பிக்கை கொள்கின்றனர்.

மேலும், எந்த ஒரு தனிநபரிடமும் மரணம் உட்பட வர வேண்டியவை வரவேண்டிய நரகத்திலிருந்து சற்றும் தவறிவிடாது என்றும், எந்த வகையிலும் அதைத்தடுத்து நிறுத்த எவராலும் முடியாது என்றும் அதுபோலவே இறைவன் அவருக்காக ஆணையிடாத எதுவொன்றையும் எந்த வகையிலும் அவர்கள் மீது கொண்டுவர இயலாது என்றும் உறுதியாக நம்பிக்கை கொண்டு அவர்கள் வாழ்கின்றனர்.

இந்த உள்ளார்ந்த நம்பிக்கையின் காரணமாக முஸ்லீம்கள் யாருக்கும் அதாவது இறைவனைத் தவிர வேறு எதற்கும் பயப்படுவதில்லை. ஏனென்றால் இறைவனின் கட்டளையின்றி ஒரு நன்மையோ அல்லது ஒரு தீமையோ தனக்கு கொண்டுவர யாருக்கும் எந்த சக்தியும் இல்லை என்றும் தனக்கு சில நன்மை கொண்டுவர இறைவன் கட்டளையிட்டால் அதை யாராலும் விலக்கி வைக்க முடியாது என்றும் அதே போலவே ஏதேனும் தீங்கு தனக்கு கொண்டுவர இறைவன் எண்ணினால், அவனைத்தவிர வேறு யாருக்கும் அதைத் தவிர்க்வும் இயலாது என்றும் அவர்கள் நன்கு அறிந்திருக்கிறார்கள்.

திருக்குர்-ஆன் இதை மிகவும் சுருக்கமாக வெளிப்படுத்துகிறது.

**“நீர் கூறுவிராக : இரவு அல்லது பகல் வேளையில் அளவற்ற அருளாளனின் பிடியிலிருந்து உங்களைக் காப்பாற்றுபவர் யார்? ஆயினும், அவர்கள் தங்கள் இறைவனை நினைவு கூர்வதைப் புறக்கணித்துக் கொண்டிருக்கின்றனர். நம்முடைய தண்டனையிலிருந்து அவர்களைக் காப்பாற்றும் கடவுளர்கள் அவர்களுக்கு ஆதரவாக இருக்கின்றனரா? அவர்களால் தங்கள் உயிர்களைக் கூடப் பாதுகாக்க முடியாது. எமக்கு எதிராக எவரும் அவர்களுடன் நட்பு கொள்ளவும் முடியாது”.** (21 : 43, 44)

அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறுகிறார். **“நீங்கள் எதையும் கேட்கும்போது அதை இறைவனிடம் கேளுங்கள், நீங்கள் ஏதேனும் உதவி தேடினால் அதை இறைவனிடம் தேடுங்கள். உங்களுக்கு ஏதேனும் நன்மை செய்ய மக்கள் ஒன்றுபட்டால் இறைவன் உங்களுக்காக பதிவு செய்தவற்றால் மட்டுமே**

**அவர்கள் உங்களுக்கு பயனடைய முடியும் என்பதையும், உங்களுக்கு ஏதேனும் தீமை செய்ய அவர்கள் ஒன்றுபட்டால் இறைவன் உங்களுக்காக பதிவுசெய்தவற்றால் மட்டுமே அவர்கள் உங்களுக்கு தீங்கு செய்ய முடியும் என்பதையும் நீங்கள் அறிந்து கொள்ளுங்கள்'' (ஹதீஸ்)**

நன்மை அல்லது தீங்கு இவை இரண்டும் இறைவனிடமிருந்து மட்டுமே வருகின்றன. மேலும் அனைத்தும் அவனுடைய விருப்பத்தை சார்ந்து இருக்கும் போது பாதுகாப்பு மற்றும் உதவிக்காக அவனைத் தவிர வேறு யாரிடமோ அல்லது எதனிடமோ திரும்புவது முற்றிலும் பயனற்றது. ஆனால் இறைவனிடம் மட்டும் உள்ள சக்திகளை பிறருக்கு தவறாக வழங்குவதன் மூலம் யதார்த்தத்தின் துல்லியமான கருத்தை நீங்கள் சிதறடித்துவிடுகின்றீர்கள்.

எந்தவொரு சூழ்நிலையிலும், மனிதன் தனது முயற்சியை மேற்கொள்ள இஸ்லாம் கற்பிக்கிறது. அவரால் முடிந்தவரை மிக சிறந்த முறையில் நேர்மையான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். நாம் வெறுமனே உட்கார்ந்து குருட்டுத்தனமான நிலையில் விதிபோல் எல்லாம் அமையட்டும் என்று தவறாக கூறுவதுபோல் ஆக கூடாது. மாறாக முயற்சி செய்ய வேண்டும். ஏனென்றால் இந்த தலை எழுத்து மற்றும் விதி எவ்வாறிருக்கிறது என்பது எந்த ஒரு மனிதனுக்கும் தெரியாது; அறியவும் முடியாது. அவருக்கு சாத்தியமான எல்லா வழிகளும் சோர்வடையும் வரை, தவிர்க்க முடியாதது நிகழும் வரை, அந்த விதியை அவர் சந்தித்ததாகக் கூற முடியாது.

ஆனால் இறைவன் என்ன விரும்புகிறான் அது நிகழும் வரை, மனிதன் தனது அனைத்து முயற்சிகளும் செய்து முடிந்தபின் அவருக்கு எது வந்தாலும் அதை பொறுமையுடனும் நம்பிக்கையுடனும் ஏற்றுக்கொள்ள வேண்டும். இறைவன் தனது அளவற்ற ஞானத்தில் வழங்கியதை தனக்கு பொருத்தமாகக் கண்டு அதை ஏற்றுக்கொள்ள வேண்டும். வரவிருக்கும் வாழ்க்கையில் இது மிக நல்ல மற்றும் அருளுக்குரியதாக அமையும் என்ற பரந்த கண்ணோட்டத்துடன், அது நிரூபிக்கக்கூடும் என்ற எதிர்பார்ப்புடன் அமைதியாக இருக்க வேண்டும்.

இறை ஆணை மீது நம்பிக்கை கொள்வது என்பது எல்லா நிலையிலும் அர்த்தமுள்ள மற்றும் நோக்கத்தின் மீதான நம்பிக்கையின் ஒரு அறிக்கையாகும். இது முஸ்லீம்களின் உணர்வின் இன்றியமையாத பகுதியாகும். அது தனது படைப்பாளனிடன் மீது முழுமையான நம்பிக்கையுடன் அடைக்கலம் தேடுவதாகும், தன்னை சமர்ப்பணம் செய்தலாகும். இந்த விஷயம் தொடர்பாக மேலும் அதிகம் பேசுவதற்கு உள்ளன. இன்ஷா அல்லாஹ்! இந்த விஷயத்தை மிகவும் ஆழமான அர்த்தத்தில் நான் தொடருவேன்.

இந்த அடிப்படை நம்பிக்கைகளில் தான் இஸ்லாமிய நம்பிக்கை உள்ளது. (1) ஏக இறைவன் மீதான நம்பிக்கை (2) மனிதகுலத்தின் வழிகாட்டுதலுக்காக இறக்கியருளப்பட்ட வேத நூல்கள் மீதான நம்பிக்கை (3) இறைத்தூதர்கள் மீதான நம்பிக்கை (4) அல்லாஹ்வின் வானவர்கள் மீதான நம்பிக்கை (5) மறுமையின் மீதான நம்பிக்கை (6) தீர்ப்பு நாள் மற்றும் உயிர்த்தெழுதல் மீதான நம்பிக்கை (7) சொர்க்கம் மற்றும் நரகத்தின் நிலைகள் மீதான நம்பிக்கை, மேலும் இறைவனின் ஞானமான, சக்தி வாய்ந்த ஆணை மீதான நம்பிக்கை.

**"இத்தூதர் தம்முடைய இறைவனிடமிருந்து தனக்கு இறக்கப்பட்டதில் நம்பிக்கை கொண்டுள்ளார். ஏனைய நம்பிக்கையாளர்களும் நம்பிக்கை கொண்டுள்ளனர். இவர்களெல்லாரும் அல்லாஹ், அவனுடைய வானவர்கள், அவனது வேதங்கள் மற்றும் அவனுடைய தூதர்கள் மீதும் நம்பிக்கை கொண்டு, நாங்கள் அவனுடைய தூதர்களுள் எவருக்கிடையிலும் எந்த வேற்றுமையும் பாராட்டுவதில்லை எனக் கூறுகின்றனர். மேலும் நாங்கள் அல்லாஹ்வின் கட்டளையை செவியேற்றோம். கட்டுப்பட்டோம். எங்கள் இறவைா! நாங்கள் உன் மன்னிப்பைக் கோருகின்றோம். உன்னிடமே நாங்கள் திரும்பி வர வேண்டியதுமிருக்கிறது, என்றும் இவர்கள் கூறுகின்றனர்" (2 : 286)**

வானங்களையும் பூமியையும் படைத்த ஒரே இறைவனை வணங்குவதற்காக அல்லாஹ் மனிதனின் இதயத்தைத் திறப்பானாக! அனைத்து வகையான ஷிர்குகளையும் விட்டு, அதிலிருந்து பாதுகாப்பைப் பெற நாம் அனைவரையும் அவன் ஆசீர்வதிப்பானாக! இன்ஷா அல்லாஹ்! நாம் அனைவரும் அதன்

கட்டாயத்தை உணர்ந்தால் மிகப்பெரிய பேரழிவுகளின் அடிப்படையில் இந்த உலகம் எதிர்கொள்ளும் சூழ்நிலைகளிலிருந்து, பாதுகாப்பை பெறலாம். அதற்கு நாம் அனைவரும் இந்த உலகத்துடனான நம் தொடர்பை விட்டுவிட்டு, அதற்கு பதிலாக நம் படைப்பாளனிடம் திரும்பி அவனை மட்டும் வணங்க வேண்டும். அவ்வாறேயானால் அனைத்து தீமைகளையும் பேரழிவுகளையும் அவன் நம்மிடமிருந்து நீக்கிவிடுவான். ஆமீன். இன்ஷா அல்லாஹ் ஆமீன்!

**Translated by:**
**Naib Amir Azim Ahmad**

**Editing & Publishing are done by**
***AMIR***
**JAMAAT-UL-SAHIH-AL-ISLAM**
**TAMIL NADU**
**Ph. No: 917502272774**